பதுளை மாநகர சபை - 2022

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பதுளை மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் தொடர்பான கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) 219 ஆம் பிரிவினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பதுளை மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது கல்கந்த விளையாட்டு மைதானத்தை கையேற்பதற்காக பதுளை பிரதேச செயலகத்தில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 8,000,000 மதிப்பீட்டு கட்டணம் நிதி செயற்பாடுகள் தொடர்பான கூற்றில் காணி மற்றும் கட்டிட அபிவிருத்தி செய்தல் செலவினமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த ஆண்டில் சரிசெய்து நடைமுறையல்லா சொத்துக்களின் காணி மற்றும் கட்டிடங்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டின் போது சபையின் நோயாளர் காவும் வண்டியை பழுதுபார்ப்பதற்காக வெளித்தரப்பினருக்கு செலுத்த வேண்டிய ரூபா 318,250 தொகை நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், இந்த ஆண்டின் போது அதற்காக செலுத்தாதிருக்குமாயின் நிகழ்த்தக்க பொறுப்பாக கடன்கொடுத்தோர் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் போது பிரதேச அபிவிருத்தி உதவி செயற்திட்டத்தின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 706,000 இயந்திர உபகரணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இறுதி கணக்குகளின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டின் நீதிமன்ற தண்டப் பண வருமானம் ரூபா 8,533,589 ஆக இருந்த போதிலும், அது ரூபா 8,306,934 ஆக நிதிச் செயற்பாடுகள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 2,193,896 ஆக இருந்த போதிலும், அது ரூபா 1,967,240 ஆக நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆண்டின் இறுதி கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 49,000,596 ஆக இருந்த போதிலும், அது ரூபா 35,451,725 ஆக நிதிச் செயற்பாடுகள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 34,396,764 ஆக இருந்த போதிலும், அது ரூபா 20,847,893 ஆக நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாத வேலைகள் மற்றும் வேலை பூர்த்தி அறிக்கை இன்றிய வேலைகளுக்காக ரூபா 3,245,495 கடன்கொடுத்தோ் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. | ஒவ்வொரு வேலைகளிலும் உடன்படிக்கை செய்யப்பட்மையினால் கடன்கொடுத்தோர் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாத வேலைகளுக்காக மதிப்பீட்டு தொகை உள்ளடக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (எ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நானாவித கடன்கொடுத்தோர் மீதியில் உள்ளடக்கப்பட்ட தீர்த்து வைக்கப்பட்ட ரூபா 1,706,003 வேலை கடன்கொடுத்தோர் மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | இரண்டு செயற்திட்டங்களுக்காக கடன்கொடுத்தோராக உள்ளடக்கப்பட்ட தொகை 2023 இன் இறுதி கணக்குகளின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண கணக்கின் மீதி ரூபா 1,030,211,523 ஆக இருந்த போதிலும், மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமான பங்களிப்பு மற்றும் பல்வேறு நன்கொடை கணக்குகளின் கூட்டு மொத்தம் ரூபா 1,026,781,080 ஆக நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2015 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற மீதியாகும். 2023 ஆம் ஆண்டில் இறுதி கணக்கின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா 1,872,710 ஆன மதிப்பிழந்த காசோலைக் கணக்கின் மீதி தொடர்பாக மதிப்பிழந்த காசோலை பதிவேடு, காசோலை கிடைத்த திகதி, யாரிடம் இருந்து கிடைத்தது, எந்த பணிகளுக்காக போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | சான்றுகளை கண்டறிய முடியாமையினால் குழுவொன்றின் மூலம் மேலும் கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவை XXIV அத்தியாயத்தின் 4 ஆம் பந்தி | சேவையை விட்டுச் சென்ற மற்றும் அறவீடுகள் நிலுவையாக உள்ள 24 ஊழியர்களிடம் இருந்து 10 வருடங்களுக்கு முன்னிருந்து அறவிட வேண்டிய ரூபா 823,936 நிலுவை கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சேவையை விட்டுச் சென்ற சபையின் அறவீடுகள் கைவிடப்பட்டுள்ள 22 உத்தியோகத்தர்கள் இருந்ததுடன், இடம் மாற்றலாகிச் சென்ற நிறுவனத்தில் இருந்து அறவிடுவதற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவை ஊழியர் கடனை விரைவாக அறவிடல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் நிதிப் பிரமாணம் 104(4) | பதுளை மாநகர சபைக்குரிய நோயாளர் காவும் வண்டி 2014 யூன் 16 ஆம் திகதி கிரிஎல்ல பிரதேசத்தில் விபத்துக்கு உட்பட்டிருந்தது. விபத்து தொடர்பான முழுமையான அறிக்கை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இறுதி அறிக்கை உள்ளூராட்சி திணைக்களத்தின் மூலம் மாகாண சபைக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், அது குறைபாடுகளுடன் காணப்படுவதான மீண்டும் உள்ளூராட்சி திணைக்களத்திற்கு கடிதம் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. | நிதி பிரமாணத்தின் பிரகாரம் விபத்து ஏற்பட்டு 03 மாதங்களுக்குள் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 40,985,192 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 41,059,734 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகராதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 24,960,000 | 13,732,830 | 7,595,197 | 6,137,633 | 24,960,000 | 18,202,787 | 9,981,382 | 8,221,405 |
| (ii) | வாடகை | 54,318,701 | 54,439,651 | 47,963,609 | 6,476,042 | 54,318,701 | 30,365,594 | 27,400,211 | 2,965,383 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 19,122,500 | 18,736,414 | 17,376,264 | 1,360,150 | 23,222,500 | 15,681,367 | 14,886,842 | 794,525 |
| (iv) | ஏனைய வருமானம் | 18,348,000 | 15,755,208 | 12,235,655 | 3,519,553 | 18,348,000 | 10,400,480 | 7,394,074 | 3,006,406 |
| | மொத்தம் | 116,749,201 | 102,664,103 | 85,170,725 | 17,493,378 | 120,849,201 | 74,650,228 | 59,662,509 | 14,987,719 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற நிலுவை ஆதன வரி ரூபா 15,214,562 தொகை வியாபார கொட்டகை கட்டணம் ரூபா 1,782,000 தொகை, கடை வாடகை ரூபா 1,125,625 தொகை, கடை வாடகை ரூபா 695,769 தொகை, சுரங்க வழி கடை வாடகை ரூபா 837,600 மற்றும் வாகன தரிப்பிடங்களில் நிறுத்தி வைப்பதற்கான கட்டணம் ரூபா 13,870,215 தொகை என்பன மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுத்து நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 490,901 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 10,995,079 என்பன பெறப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டில் பெற வேண்டிய நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 1,967,241 தொகையில் ரூபா 1,476,339 தொகை தற்போது கிடைத்துள்ளது. முத்திரைக் கட்டணம் 20,847,893 தொகையில் ரூபா 9,852,813 தொகை இது வரையில் கிடைத்துள்ளது. | நிலுவையாக உள்ள நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |

### 2.2.3 மிகைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 226(1) ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வாளர் ஈலைமை அதிபதியால் 1994, 2004 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட 03 மிகை கட்டணங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ரூபா 3,754,000 அறவிடப்பட்டிருக்கவில்லை. | மிகை கட்டணம் விதிக்கப்பட்டுள்ள பணத்தை அறவிடுவதற்காக நீதிமன்ற ரீதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் செயற்படுத்தப்படுகின்றது. | மிகை கட்டணத்தை விரைவாக அறவிடல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபை அதிகார பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற 15 டொன் அளவிலான கழிவுகள் கழிவுப் பொருள் தளத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு கூட்டுப்பசளை உற்பத்திற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், உக்காத கழிவுகள் மற்றும் உக்குகின்ற கழிவுகள் 25 டொன் அளவில் நீண்ட காலமாக கழிவுப்பொருள் தளத்தில் வரையறுக்கப்பட்ட இடத்தில் பசளை உற்பத்திற்கு பயன்படுத்தப்படாமல் குவித்து வைக்கப்பட்டிருந்தது. | சேகரிக்கப்படுகின்ற வகைப்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. அதில் பொருளாதார பெறுமதியுடைய மீள் சுழற்சி செய்ய முடியுமான பொருட்களை விற்பனை செயவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், உக்குகின்ற கழிவுகளை கூட்டுப்பசளையாக தயாரித்து விற்பனை செய்யப்படுகின்றது. | முறையாக கழிவுப் பொருட்களை அகற்றி பசளை உற்பத்திற்கோ அல்லது மீள் சுழற்சிக்கோ உட்படுத்துதல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் படி வாடகை 05 வருடங்களுக்கு ஒரு தடவை திருத்த வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும், 697 கடைகள் தொடர்பாக 2015 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு வாடகை அறவிடப்படுகின்றது. | கடை வாடகை அறவிடுவதற்கு உரிய மதிப்பீட்டு அறிக்கையை வழங்குமாறு விலை மதிப்பீட்டு அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ள கடைகள் தொடர்பாக மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வாடகை 05 வருடங்களுக்கு ஒரு தடவை திருத்தப்பட்டு வருமானம் அதிகரிக்கடல் வேண்டும். |
| (ஆ) | சபைக்குரிய ரூபா 4,625,000 ஆன ஓட்டத்தில் இருந்து அகற்றப்பட்டிருந்த 05 வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்காக சபை | வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்கு உரிய சபை தீர்மானம் கிடைத்திருந்த போதும், விற்றுத் தீர்க்கும் நடவடிக்கைகள் யாவும் பூர்த்தி | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், அந்த சொத்துக்கள் நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணத்தில் காண்பிக்கப்பட்டிருந்தது. | செய்யப்படாமையினால் 2022 இன் கணக்கின் மூலம் அது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ளது. |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பதுளை சேனாநாயக பூங்காவில் சிற்றுண்டிச்சாலை 2001 ஆகஸ்ட் 30 ஆம் திகதி முதல் ரூபா 5,000 மாதாந்த வாடகையில் வியாபார நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்கு 25 வருடங்களுக்கு உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் உடன்படிக்கை 05 வருடங்களில் 05 தடவைகள் புதுப்பிக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், உடன்படிக்கையின் நிபந்தனைகள் மீறி வீதிகளுக்கு நெருக்கடி ஏற்படும வகையில் விற்பனை கடைகளின் முன்பக்கத்திற்கு அடுத்தால் ஒரு பகுதியொன்று சேர்க்கப்பட்டுள்ளது. | 2014 ஆம் ஆண்டின் போது மதிப்பீட்டு அறிக்கை கோரப்பட்டுள்ளதுடன். 2016 ஆம் ஆண்டின் போது கிடைத்த மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் கடை வாடகை திருத்தப்பட்டுள்ளது. 2022 திசெம்பர் 05 ஆம் திகதி களப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின் பிரகாரம் புதிய மதிப்பீடொன்றுக்காக கோரப்பட்டிருந்ததாக மாதாந்த தவணைப் பணம் ரூபா 58,500 ஆன மதிப்பீடொன்று 2023.04.26 ஆம் திகதி கிடைத்துள்ளது. அதன் பிரகாரம் மாதாந்த வாடகையை திருத்தி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பதுளை ரிதிபான பிரதேசத்தில் 22 ஏக்கர் 01 ரூட் 05 பேர்ச் பரப்பளவுடைய ‘‘ரிதிபானவத்தை’’ என்ற பெயருடைய காணி பதுளை மாநகர சபையின் நகர பிதா, உறுப்பினர்கள் அதன் பதவியணியினருக்கு இரத்துச் செய்ய முடியாத முறையில் 1994 யூன் 29 ஆம் திகதிய பகிரங்க நொத்தாரிசினால் எழுதப்பட்ட சான்றுப்படுத்தப்பட்ட | பதுளை ரிதிபான வத்தை காணி தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உறுதிப்படுத்தப்படும். | மாநகர சபைக்குரிய ஆதனங்களை பாதுகாத்தல் வேண்டும். |

நன்கொடை உரித்துறுதி பதுளை மாநகர சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. முன்னாள் நகர பிதாவினால் முறையற்ற பிரகாரம் அது பதுளை மாநகர சபையினால் உரிமை கோரப்பட்டிருந்த மேற்கூறப்பட்ட காணியின் உரித்து மாநகர சபையின் நகர பிதா பதவிக்கும் மற்றும் காணியின் அட்டோனி அதிகாரத்தை கையளிக்கின்ற பிரகாரம் மீண்டும் பிழைகளை சரிசெய்யும் உரித்துறுதி மூலம் திருத்தப்பட்டிருந்தது.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | (i) | 2008 ஆம் ஆண்டு முதல் 2014 வரை பதுளை விருந்தினர் விடுதி கட்டிடம் வெளித்தரப்பினருக்கு மாதாந்த முகாமைத்துவ கட்டணத்தின் கீழ் ரூபா 150,000 தொகையில் வாடகைக்கு வழங்குவதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் 2008 சனவரி 18 ஆம் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 2009 பெப்ரவரி 19 ஆம் திகதிய இலக்கம் 20/1589 என்ற வர்த்தமானி பத்திரத்தில் விருந்தினர் விடுதி கட்டிடம் மாநகர சபைக்கு கைளிக்கப்பட்டிருந்ததுடன். 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை அறவிட வேண்டிய ரூபா 2,975,280 ஆன நிலுவை முகாமைத்துவ கட்டணம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | விருந்தினர் விடுதி கட்டிடத்தில் இருந்து அறவிடுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நிலுவை பணத்திற்காக நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவை முகாமைத்தவ கட்டணத்தை அறவிடல் வேண்டும். |
| | (ii) | பதுளை நகரத்தின் மத்தியில் அமைந்துள்ள உயர் வணிக பெறுமதியுடைய 20 கடைகளுடன் விருந்தினர் விடுதி கட்டிடம் 2017 ஆம் ஆண்டு முதல் 2020 யூன் வரை மாநகர சபை அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்கு பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், மாநகர சபை அலுவலகம் அந்த கட்டிடத்தில் இருந்து விலகி சென்ற போதிலும், 2020 யூன் முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் எந்தவொரு வருமானம் உழைக்கும் பணிகளிலும் அந்த விருந்தினர் விடுதி கட்டிடம் பயன்படுத்தப்படாமல் பயனற்று காணப்பட்டது. | அந்த கட்டிடம் வருமானம் உழைக்கின்ற வழியொன்றாக உட்படுத்துவதற்கு மாநகர சபைத் தீர்மானம் பல சந்தர்ப்பங்களில் எடுக்கப்பட்டிருந்தது. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களில் வருமானத்தை உழைக்கும் பணிகளில் ஈடுபடுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் (1) ஆம் பகுதியின் 13.2 ஆம் பந்தியில் நிதிப் பிரமாணம் 770(4) இன் கீழ் அரச நிறுவனங்களில் உடைந்த வாகனங்கள் பாவணையில் இருந்து அகற்றுவதற்கும் அல்லது செயற்படு நிலைக்கு கொண்டு வரககூடிய வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்த போதிலும், சபைக்குச் சொந்தமான ரூபா 8,570,000 ஆன பாவனையில் இருந்து அகற்றப்பட்ட காலம் இனங்காண முடியாத 08 வாகனங்கள் தொடர்பாக மேற்கூறப்பட்ட நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களைவிற்றுத் தீர்ப்பதற்காக தேவையான ஆவணங்கள் மாகாண சபைக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், HV-80 வீதி செப்பனிடுகையை பழுதுபார்க்கும் நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளது. UPKG-5849 என்ற ஜீப் வண்டி மாகாண சபையின் மூலம் எங்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அதனை பழுதுபார்ப்பதற்காக கணிசமான செலவினம் ஒன்றை செய்ய ஏற்படுகின்றமையால் மீண்டும் மாகாண சபைக்கு கையளிப்பதற்காக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | வாகனம் தொடர்புடைய பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1947 இன் 16 ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 வது அத்தியாயம்) 129 (இ) பிரிவின் பிரகாரம் பதுளை மாவட்ட செயலகத்தில் மலசல கூடத்தில் ஒன்று சேர்கின்ற மலத்தை நேரடியாக பதுளை பண்டாரவளை பிரதான வீதியில் வடிகாண் முறையில் அகற்றுவதற்கு அமைக்கப்பட்டிருந்தது. பிரதான வீதியில் மின்சார சமிஞ்சை முறைமை அருகில் பயணம் செய்யக் கூடிய மக்களுக்கு மலக் கழிவுகளினால் துர்நாற்றமும் அதிக அசௌகரியத்திற்கும் உட்பட்டிருந்ததுடன், அந்த நிலைமையை சரிசெய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கட்டிடத்திற்காக உரிய திட்டம் அங்கீகரிக்கும் அதிகார தரப்பினர் நகர அபிவிருத்தி அதிகார சபையாகும். எனினும், ஏற்பட்டுள்ள இந்த சுகாதார பிரச்சினைகள் தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலின் போது சபையின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் வழங்கப்பட்டுள்ளதுடன், மல கழிவுகளை அகற்றும் போது சரிசெய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | பொது மக்கள் பாதிப்பிற்கு உட்படாத வகையில் மல கழிவுகளை முறையாக அகற்றுதல் வேண்டும். |